திரு. என். கே. பழனிசாமி : நீலகிரியில் நடுவட்டம் பகுதியிலே ஐஸ் கிரீமிற்குத் தேவையான வனிலா எஸ்ஸன்ஸ், பப்பர்மின்ட் எஸ்ஸன்ஸ் எல்லாம் குறைந்த அளவிலேதான் செய்யப்படுகிறது. 5 ஆயிரம் ஏக்கர் பாரஸ்ட் லேண்ட் ஆக இருந்தாலும் இன்னும் அதிகப்படி செய்தால்தான் பாரின் எக்சேஞ்ச் மிச்சமாகும். ஆகவே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு மத்திய சர்க்கார் பாரஸ்ட் லெவலை இன்க்ரீஸ் செய்யவேண்டுமென்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? இந்த அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையிலே காட்டு வளத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதிஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையிலே ஒவ்வொரு ஆண்டும் வளர்த்ததன் விளைவாக 84,622 ஏக்கர் நிலம் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 5 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு வளர்ப்பதற்குத் திட்டம் இருக்கிறது. இதுபோன்ற சாத்தியக்கூறுகள் இருக்கிற இடங்களைப் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்வது நல்லதுதான்.

MODERN SLAUGHTER HOUSE.

*616 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the present stage of the proposal to set up a modern slaughter house in Tamil Nadu with Central assistance ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும்? எந்த முறையில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசு வேளாண்மைத் துறை அமைச்சரிடமிருந்து ஒரு பரிந்துரை நமக்கு வந்தது. அதைப் பரிசீலனை செய்து மத்திய அரசும் இதிலே பங்குதாரராக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது, அதோடு மாநில அரசு, கார்ப்பரேஷன் மூன்றும் சேர்ந்து நடத்தலாம் என்ற குறிப்பு இருக்கிறது. பங்குதாரர் ஆன பிறகு வங்கியிலிருந்து மூலதனம் பெறலாம் என்று மத்திய அரசிடமிருந்து செயற் குறிப்பு வந்திருக்கிறது. மீட் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்ற முறையில் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார், அவர் அறிக்கை கொடுத்து இருக்கிறார், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் இருந்தால்தான் நவீன முறையில் இதை செய்ய முடியும் என்று குறிப்பிலே காணப்படுகிறது.